கிறோம். வேறு இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றனவா என்பதையும் ஆராய குழுவிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். குழு அறிக்கை வந்த பிறகுதான் முழு விவரங்களையும் சொல்ல இயலும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் குழு அறிக்கை இந்தச் சபை முடிவதற்கு முன்னால் நமக்குக் கிடைக்குமா? அப்படியானால் சபைமுன் வைக்கப்படுமா? 15 நாட்கள் என்று சொன்னார்கள். அப்படியில்லாது போனாலும் அக்குழு அறிக்கை உறுப்பினர்களுக்காவது அனுப்பப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பிறகு ஒரு முறை சட்டமன்றம் கூடும்போது குழு அறிக்கையின் சாரம்சத்தைக் கேட்க உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. நானும் பதில் சொல்ல முடியும். இரு வாரங்களில் அனுப்பச் சொல்லியிருக்கிறோம்.

Dr. H. V. HANDE : May I know whether the Government is going to wait till the report is submitted or whether the repair job would be immediately undertaken? May I know whether without waiting for the report of the Committee, the repairing job had already been undertaken? May I also know what is the expenditure that is going to be incurred for repairing this?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : போபால் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் தான் செய்யவேண்டும். ஸ்பேர் ஒன்று இருக்கிறது. இரண்டு வேண்டும். வேறு மாநிலங்களில் இருந்து ஸ்பேர் எப்படியாவது வாங்கித் தருகிறோம் என்று அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(3) தீர்மானங்கள்

உறுப்பினர் திரு. எம். பழனிசாமி பேரவைக் கூட்டத்திற்கு வாராமைக்கான அனுமதி அளித்தல் குறித்து

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 15-வது விதியின்கீழ் திரு. எம். பழனிசாமி எம்.எல்.ஏ. அவர்கள் 1—4—1973-ம் தேதியில் இருந்து ஆறு மாத காலத்திற்கு இப்பேரவைக்கு வாராமல் இருக்க அனுமதி அளிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.